**தலைப்பு 256 – கம்பஹா மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

கம்பஹா மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜூன் 17 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் அமைந்தனவாகும். அவ்வாறான செவ்வை பார்த்தளின் நோக்கெல்லை மற்றும் அளவு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கிணங்க பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு ஆகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

கம்பஹா மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிகர நிதியேற்பாடு ரூபா 1,244.23 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டினது இறுதியளவில் அதில் ரூபா 1,022.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதியில் ரூபா 221.93 மில்லியன் அல்லது 17.84 சதவீதம் சேமிப்புக்குள்ளானது. விபரம் வருமாறு

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறியநிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | நிகர நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 949.43 | 944.99 | 4.44 | 0.47 |
| மூலதனம் | 294.80 | 77.31 | 217.49 | 73.78 |
| மொத்தம் | **1,244.23** | **1,022.30** | **221.93** | 17.84 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய 28 அமைச்சுக்களும் 16 திணைக்களங்களும் ரூபா 5,812.62 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாட்டை மேற்கொண்டிருந்ததுடன், மீளாய்வாண்டினது முடிவளவில் அதில் ரூபா 5,543.27 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 278.35 மில்லியன் அல்லது 4.79 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 25601 ஆம் இலக்க விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாகப் பாராளுமன்றம் விதித்திருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதியும் பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75.90 | 64.42 | 59.90 | 64.80 | 250.00 | 228.59 |

## 2.3 கட்டு நிதிக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 70002/0000/000/0303/0015/000 இலக்க கட்டு நிதியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 52.17 மில்லியனாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 6 பொது வைப்புக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளினது கூட்டுத் தொகை ரூபா 70.57 மில்லியனாகும். விபரம் வருமாறு

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/000/0001/0061/000 | 0.01 |
| 6000/0000/000/0002/0079/000 | 0.64 |
| 6000/0000/000/0013/0049/000 | 32.68 |
| 6000/0000/000/0016/0031/000 | 269.28 |
| 6000/0000/000/0017/0010/000 | 399.75 |
| 6000/0000/000/0018/0039/000 | 2.71 |
| மொத்தம் | 705.07 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளில் போதியதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் சில பதிவேடுகளைப் பேணியிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படவில்லை என கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்படவில்லை. |
| (ஆ) | கணனிகள், துணைப் பாகங்கள், மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - மேற்படி - |
| (இ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டு பேணப்படவில்லை. |
| (ஈ) | மின் உபகரணப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | - மேற்படி - |

## 3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் அலுவலகங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹர பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டில் பொதுசனப் பிரதிநிதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,061,595 பெறுமதி வாய்ந்த பண்டங்களும் 8 வகையான 261 அலகுகளைக் கொண்ட உபகரணங்களும் 2016 சனவரி மாதமளவிலும் விநியோகிக்கப்படாதிருந்தன.

(ஆ) மஹர பிரதேச செயலகத்தின் 2 சமுதாய நீர்த்திட்டத்தை நிர்மாணிப்பதற்கென 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,726,744 செலவிடப்பட்டிருந்ததுடன், அச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு முடிவிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்தன.

(இ) ஓய்வூதியத்தைத் தவறாகக் கணிப்பீடு செய்தமையால் மீளாய்வாண்டு இறுதியவில் 9 பிரதேச செயலகங்களால் ரூபா 15,277,332 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 9 பிரதேச செயலகங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,221,479 பெறுமதியான 137 வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மூன்று பிரதேச செயலகங்களில் வைப்பிலிடப்பட்டு 10 ஆண்டுகளைக் கடந்த ரூபா 107,605 பெறுமதியான காணி வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) ஜாஎல பிரதேச செயலகம் ஒருவருக்கு வீடு ஒன்றை வழங்குவதற்காக ஏற்பாடு செய்த ரூபா 100,000 நிதியானது எதுவித பயனுமின்றி 2014 திசெம்பர் தொடக்கம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஜாஎல பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் 02 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த இனங்காணப்பட முடியாத காசு மற்றும் முத்திரைகளினது பெறுமதி ரூபா 105,038 ஆகும்.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 25601 உடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளினது கூட்டுத் தொகை ரூபா 2,185,294 ஆகும். அந்தக் கடன் மீதி நிலுவை 1 முதல் 5 ஆண்டுகளாக நிலவி வந்தபோதும் அக்கடன் நிலுவை மீதிகளை மீளாய்வாண்டு முடிவிலேனும் அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(ஆ) தனிப்பட்ட மீதிகளது வகைப்படுத்தல் பொழிப்பானது பெறுமதி ரூபா 231,376,873 ஆகவிருந்ததுடன், கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 231,397,342 ஆகியமையால் ஏற்பட்ட ரூபா 20,469 வித்தியாசத்தை இனங் கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 திசெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகமானது நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன் வைக்க வேண்டுமாயினும், அவ்வறிக்கையானது 2016 ஜுன் 25 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன் முன்வைக்கப்படவில்லை.

## 3.6 உள்ளுர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது தெரிய வந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திவுலபிடிய பிரதேச செயலகம் 2015 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 16 செயற்திட்டங்கள் | 9,100,000 | 2015.12.31 ஆந் திகதிக்கு முன்னர் | மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக |
| (ii) | மஹர பிரதேச செயலகத்தில் 100 நாள் நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட 5 செயற்திட்டங்கள் | 2,494,836 | 2015.12.31 ஆந் திகதிக்கு முன்னர் | தாமதத்திற்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3.7 செயலாற்றல்

கம்பஹா மாவட்டச் செயலகத்தின் கடமைகள் தொடர்பான முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் பின்வருமாறு

### போதியளவு நிறைவேறாத பணிகள்

மாவட்டச் செயலகத்தினால் போதியளவு நிறைவேற்றப்படாத பணிகள் இருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) மினுவாங்கொடை பிரதேச செயலகப் பிரிவால் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் 364 பசுக்களை ரூபா 18,200,000 செலவில் பால் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளில் 197 பசுக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, மீளாய்வாண்டின் முடிவளவில் அதன் முன்னேற்றம் 54 சதவீதமாக இருந்தது.

(ஆ) மஹர பிரதேச செயலகத்தில் வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளரின் சீவனோபாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக 350 பயிர்ச்செய்கையாளருக்கு வெற்றிலைக் கம்பங்களை வழங்குவதற்கு 2014 ஆண்டில் தொடரப்பட்ட செயல் திட்டம் ஒன்றை அமுலாக்குவதற்கென மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,512,546 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 69 வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு மாத்திரம் வெற்றிலைக் கம்பங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதம் ஆக மாத்திரமே இருந்தது.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுயதொழில் வேலைவாய்ப்புச் செயற்திட்டத்திற்குப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ரூபா 1,588,906 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய 45 காசோலைகள் நிறுவனத்திடம் கணக்கொன்று இல்லாதமை காரணமாகவும் நிறுவனம் மூடப்பட்டிருந்தமை காரணமாகவும் நிறுவன உரிமையாளர்கள் இறந்து போனமையாலும் நலன் பெறுநர்கள் தகுதியற்றவர்களாக உறுதி செய்யப்பட்ட காரணத்தாலும் காசோலைகளது பெறுமதி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, பொருட்களைக் கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படாமை, பொருத்தமான நலன்பெறுநர்களை இனங்காணாமை, உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் தொடர்பாக அறிந்திராமை மற்றும் முறையான கண்காணிப்பின்மை போன்ற காரணங்களின் நிமித்தம் மீரிகம பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் சுய தொழிலாளர்களுக்கு நலன்களை வழங்க முடியாது போயிருந்தது.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச செயலாளரின் பொறுப்பில் உள்ள இளம் பிராயத்தினரின் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் அவர்களது 18 ஆவது வயது பூர்த்தியானதன் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமாயினும், 6 பிரதேச செயலகங்களில் 18 ஆவது வயது பூர்த்தியான 17 சிறுவர்களினது சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் 6 முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களது கல்விச் சான்றிதழ்களினது சரியானதன்மை குறித்த நிறுவகங்கள் மூலம் சான்றுறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) கட்டான பிரதேச செயலகத்திற்குரிய 18 வயதுக்குக் குறைந்த பாடசாலை செல்லாத பிள்ளைகளிர் 21 பிள்ளைகள் சிறுவர் உழைப்பாளர்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கட்டான பிரதேச செயலகப் பிரிவில் 69025 குடும்பங்களில் 355 குடும்பங்கள் நீர் இல்லாமலும் 591 குடும்பங்கள் கழிவறைகள் இல்லாது இருப்பதும் புலனாகியது.

(உ) கட்டான பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரச காணிகளில் ஏறக்குறைய 15 ஆண்டுகளாக 256 பேர் அத்து மீறிக் குடியிருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) திவுலுப்பிட்டிய பிரதேச செயலகத்தின் காணிச் சுவீகரிப்புப் பதிவேட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் பல்வேறு நோக்கங்களின் பொருட்டு காணிக்கட்டளைச் சட்டம் 38(அ) இடைக்கால ஏற்பாட்டிற்கமைய 5 சந்தர்ப்பங்களில் காணிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அக்காணிகளைச் சுவீகரித்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், காணிச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கட்டான பிரதேச செயலகத்தில் 09 சந்தர்ப்பங்களில் காணிச் சுவீகரிப்புக்காக வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையான ரூபா 10,095,425 குறித்த நபர்களையோ அல்லது நிறுவனங்களையோ இனங்கண்டு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஏ) சரியான தகவல்களைப் பெற்று, முறையான பரீசீலனை மற்றும் கண்காணிப்புடன் அலுவலக முறைமையைத் திட்டமிட்டு அன்றாட நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படவில்லை. இதன் காரணமாக, ஜாஎல பிரதேச செயலகத்தில் 2015 ஆம் ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் 69 காசோலைகள் நாள்நீடிப்பு, பதில் காசோலைகளை வரைதல், கோடுகளை இரத்துச் செய்தல், பெயர் மாற்றம், திகதி மாற்றம், தொகை மாற்றம், காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டமை, கணக்கு இலக்கங்களைச் சரியாக்குதல் மற்றும் பெயருக்குரிய கணக்கிற்கு மாத்திரம் என்பதை இரத்துச் செய்தல் என்பன காரணமாக புதிய காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஐ) ஓய்வூதியம் பெறுபவர் ஒருவர் இறக்குமிடத்து குறித்த பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரால் 07 நாட்களுக்குள் மரணம் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். எனினும், வத்தளை பிரதேச செயலகத்தில் இறப்பிற்குள்ளான 7 பேர் சம்பந்தமாக அத்தகவல்கள் குறித்த கிராம உத்தியோகத்தர்களால் பிரதேச செயலகத்திற்கு அறிவிப்பது 4 முதல் 10 மாத தாமத்திற்குள்ளானமையால், ரூபா 911,444 கூட்டுத் தொகையுடைய ஓய்வூதியம் குறித்த அஞ்சலகம் / வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த அலுவலகங்கள் கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியத்தை பல மாதங்களாகத் தம்வசம் வைத்திருந்தன.

(ஒ) நீர்கொழும்பு பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறும் சகல ஓய்வூதியக்காரர்களும் தாம் உயிருடன் இருப்பதைக் குறிக்கும் உயிர் வாழ் சான்றிதழ்களைக் குறித்த ஆண்டின் ஆரம்பத்தில் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், ஓய்வூதியம் பெறும் 746 பேர் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரை உயிர்வாழ் சான்றிதழ்களைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஓ) நீர்கொழும்பு மற்றும் கட்டான பிரதேச செயலகங்களில் செயலற்ற நிலையில் இருந்த 3895 ஓய்வூதியக் கோவைகள் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2015 ஜுன் 25 ஆந் திகதிய 16/2015 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றிக்கைப் பிரகாரம் 2006 சனவரி 01 முதல் அரசாங்க சேவை தொடர்பாக அமுலாகிய சம்பள வியூகத்தின் பிரகாரம், ஓய்வூதியத்தை மீளாய்வு செய்யும் போது, நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பேணப்பட வேண்டிய 109 ஓய்வூதியக் கோவைகளில் 75 கோவைகள் அலுவலகத்தில் இருக்கவில்லை.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 46 | 45 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 27 | 17 | 10 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 3,076 | 2,645 | 431 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 124 | 109 | 15 |
| | மொத்தம் | 3,273 | 2,816 | 457 |